The Rt Revd Dr Titus Chung
**The Bishop of Singapore**

சிங்கப்பூர் பேராயம்
**The Diocese of Singapore**
St Andrew's Village
1 Francis Thomas Drive #01-01
Singapore 359340

Tel: (65) 6288 8944
Email: bpoffice@anglican.org.sg

22 ஆகஸ்ட் 2022

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,
உயிர்த்தெழுந்த நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய தின பேரணி 2022 உரையில், தண்டனைச் சட்டத்திலிருந்து s377A ஐ ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் அறிவித்தார். இன்னும் பல அரசியலமைப்புச் சவால்களையும், ஓரினச்சேர்க்கையாளர்கள் மீதான சமூகத்தின் மாறிவரும் மனப்பான்மையையும் இந்தச் சட்டம் தடுக்காது என்று கருதப்படுவதால் இது செயல்படுத்தப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார். அதே சமயத்தில் , ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான திருமணம் என்ற நீண்டகாலப் பாரம்பரிய வரையறையையோ அல்லது சமூக நெறிமுறைகளையோ கொள்கைகளையோ (எ.கா. வீடு, தத்தெடுப்பு, கல்வி) மாற்றும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் பிரதமர் தெளிவுபடுத்தினார். திருமணத்தின் மேற்கூறிய வரையறையைப் பாதுகாக்கச் சிங்கப்பூர் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார். திருமண விவகாரங்களில் சிங்கப்பூர் சமூகத்தின் நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பண்புகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதைப்பற்றி நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நம்மில் சிலர் அரசாங்கத்தால் உறுதிபடுத்தப்பட்ட வேற்றுப்பாலின திருமணத்தின் உறுதிமொழியால் ஆறுதல் பெற்றிருக்கலாம், ஆனால் மற்றவர்கள் s377A ரத்து செய்யப்பட்டதால் ஏமாற்றம் அடைந்திருக்கலாம். இன்னும் சிலர், நமது சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கு மேலும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்றும், அதில் நம் பிள்ளைகள் வளருவதற்கு ஏற்ற , குறிப்பாகத் தெளிவான வேதவார்த்தையின் போதனைக்கு எதிராக இயங்கும் கலாசார பண்புகள் மற்றும் நடைமுறைகளை எதிர்த்துப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நினைத்திருக்கிறார்கள். இது போன்ற சமயங்களில் தான் நமது உதவியாளராகவும் பாதுகாவலராகவும் இருக்கும் தேவனை நோக்கி நம் கண்களைத் திசை திருப்பும்படி நினைவுபடுத்தப்பட வேண்டும். சிறந்த விளைவுகளைப் பெறுவதற்காக அரசாங்கம் மற்றும் பிற நட்பு நாடுகளுடன் நாம் தொடர்ந்து பணியாற்றுவோம், மேலும் அரசாங்கம் திருச்சபையில் ஈடுபடுவதை நாங்கள் பாராட்டுகிறோம். நாமும் ஜெபிப்போம், தேவனை நோக்கிப் பார்ப்போம், கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், நம்முடைய பிரயாசம் விருதா.

மனித பாலுறவு குறித்த ஆங்கிலிக்கன் திருச்சபையின் நிலைப்பாடு மாறாமல் உள்ளது, மற்றும் லேம்பத் 1.10 இல் கூறப்பட்டுள்ளபடி, திருமணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வாழ்நாள் முழுவதும் இணைந்திருக்கும் என்ற வேதவார்த்தையின் போக்கை கடைபிடிக்கிறோம். மேலும் ஓரினச்சேர்க்கை கொண்டவர்கள் உட்பட அனைத்து நபர்களையும் நாம் மதிக்கிறோம், ஓரினச்சேர்க்கை நடைமுறை வேதத்திற்குப் பொருந்தாது என்ற நம்பிக்கை நிலைமாறாமல் இருக்கும். s377A ரத்து செய்யப்படுவதன் மூலம், அரசியல் சமரசத்தின் விளைவாக நமது சமூக-அரசியல் நிலப்பரப்பு மாறலாம், ஆனால் நாம் பரிசுத்த வேதாகமத்திற்கு கீழ்ப்படிதவதோ மாறக்கூடாது.

அறிவிப்பைத் தொடர்ந்து, ஒரு தேவாலயமாக, வேதவார்த்தைகளின் உண்மைகளின் அடிப்படையில், நம்முடைய திருச்சபையினருக்கு நாம் என்ன கற்பிக்கிறோம் என்பதில் நாங்கள் கட்டுப்படுத்தப்படவும் இல்லை பரிசுத்த வேதாகமத்திற்கு எதிரான எந்த நடவடிக்கையும் எடுக்க நாங்கள் கட்டாயப்படுத்தப்படவும் மாட்டோம் என்பதில் நாம் உறுதிப்படுத்தப்பட விரும்புகிறேன்.

முன்னோக்கிச் செல்லும்போது, ரத்து செய்தலின் பாதகமான விளைவுகளை நாம் எவ்வாறு கையாள்வது என்பததைக் குறித்து நம்மையும், குறிப்பாக நமது இளைஞர்களையும் சிறந்த முறையில் ஆயத்தப்படுத்தித் தயார்படுத்த வேண்டும். இது நமது திருச்சபையினரின் கல்வி மற்றும் கற்பித்தல், ஆலோசனை ஆதரவு உட்பட ஆதாரங்களை கிடைக்கச் செய்தல், இளைய விசுவாசிகளுடன் வலுவான ஈடுபாடு மற்றும் நாம் எவ்வாறு தேவனுக்கு உண்மையாக இருக்க முடியும் என்றும் நற்செய்தியின் செயலூக்கமுடைய சாட்சிகளாக இருக்க முடியும் என்பதைப் பற்றிய உரையாடலில் ஈடுபடுவதையும் உள்ளடக்கும். பண்பாட்டுச் சிக்கல்களை வழிசெலுத்துவதற்கான புதிய வழிகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும், மேலும் பிரதான கட்டளையை நிறைவேற்றும் நோக்கில் சமூகத்தை மிகவும் திறம்பட ஈடுபடுத்த வேண்டும். அந்த முடிவை அடைய , நாம் குறிப்பாக நமது தலைவர்கள் ஞானத்தையும் தைரியத்தையும் பெற ஜெபிக்க வேண்டும்.

செய்ய வேண்டியது நிறைய உள்ளது, ஒரு அத்தியட்சாதினமாக நாம் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் பல்வேறு பிரச்சினைகளைக் கையாள்வோம். இன்றைய சூழலுக்கு நமக்குப் பொருந்தக்கூடியது என்று நான் நம்பும் நம் கர்த்தரின் இந்த வார்த்தைகளை நான் உங்களிடம் விட்டுச் செல்ல விரும்புகிறேன்:

> "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்." ஏசாயா 41:10

கிறிஸ்துவுக்குள் உங்களுடைய,

+ Titus Singapore

பேரருள் திரு டாக்டர் டைட்டஸ் ச்சுங்
சிங்கப்பூர் பேராயர்